அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI





Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624


அ.எண் :94/2017

தேதி : 15/09/2017

## நவோதயா பள்ளி திட்டத்தின் மூலம் தமிழக மாணவர்கள் தரமான கல்வி பெறுவதையும், ஹிந்தி மொழி கற்றுக்கொள்வதையும் அரசியல் காரணங்களுக்காக எதிர்க்க வேண்டாம்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் திரு.ஆர்.சரத்குமார் அறிக்கை.

நவோதயா பள்ளி திட்டம் என்பது மும்மொழி கொள்கை கொண்டது. மத்திய அரசாங்கத்தின் இந்த திட்டத்தினால் இந்தியாவின் மற்ற மாநிலத்தை சேர்ந்த பல்லாயிர மாணவர்கள் பயன் பெற்றிருக்கின்றனர். ஏழை எளிய மக்கள் மிக குறைந்த செலவில், அல்லது முழுதும் உதவி தொகை மூலம் உயர் வகை கல்வி பெறுவதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பது உண்மை.

சமசீர் கொள்கை என்பது இந்திய அளவில் நடைமுறை படுத்தவேண்டும் என்பது உண்மை. அந்த அளவுக்கு தேசிய மொழியான ஹிந்தியை கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் தமிழக மாணவர்களுக்கு இருக்கிறது என்பதும் உண்மை.

நமது தலைவர்கள் பலரும் பல மொழிகள் தெரிந்தவர் என்பதை பெருமையுடன் பறை சாற்றும் நாம், நமது மாணவரை ஹிந்தி கற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏன் தடுக்க வேண்டும்.

ஹிந்தி திணிக்கப்படுகிறதா அல்லது இன்றைய மாணவர்களால் ஏற்றுக்கொள்ள படுகிறதா என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும். இதிலும் அரசியல் செய்வது நியாயமாகாது.

தமிழக இளைஞர்கள் மாநிலத்தின் எல்லை தாண்டி மற்ற பணிக்கு செல்வதற்கு மொழி தெரியாமல் இருப்பது ஒரு காரணமாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம். தற்போது அமெரிக்காவின் போக்கும் நமது இளைஞர்களின் வேலை வாய்ப்புகளை குறைக்கும் பட்சத்தில் நமது நாட்டுக்குள் மற்ற மாநிலங்களுக்கு செல்வதும் ஊக்குவிக்கப்படாவிட்டால் நமது இளைஞர் சமுதாயம் பாதிக்கப்படுவார்கள்.

..2


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017

No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.

தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624




பல்வேறு விதமான பாட திட்டங்கள் நமது நாட்டில், மாநிலத்தில் உள்ளன. பல்வேறு தரத்திலும் உள்ளன. நவோதயா திட்டம் மற்ற மாநிலங்களில் மாணவர்களுக்கு பெரிதும் உதவி இருக்கும் நேரத்தில், பல ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்த ஹிந்தி எதிர்ப்பு ஆயுதத்தை தற்போதும் கையிலெடுத்து அரசியல் கட்சிகள் அரசியல் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது பக்கத்து மாநிலமான புதுவையில் நீண்ட காலமாக நடப்பில் இருக்கும் இந்த திட்டத்தை தமிழகத்தில், எதிர்க்கும் கட்சிகளால் எதிர்க்க படுவதில்லை. இதன் காரணத்தை மக்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

மத்திய அரசின் அனைத்து திட்டங்களையும் எதிர்க்க வேண்டும், அரசியல் லாபம் வேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையில் பலன் பெற இருக்கும் சில ஆயிரம் ஏழை மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, நவோதயா பள்ளி திட்டத்தை தடுக்க முயற்சி செய்யாமல் வரவேற்போம்.

தேசிய மொழியை கூடுதலாக கற்பது கண்டிப்பாக வேலை வாய்ப்பை பெருக்கும் என்பதை அரசியல் கட்சிகள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

மத்திய அரசின் திட்டங்கள் ஒரு பக்கத்தில் இருந்தாலும், தமிழகத்தின் பாடத்திட்டங்கள் மேம்படுத்தப்பட்டு உயர்ந்த தரத்தில் அமைக்கப் படவேண்டும். தமிழக பள்ளிக்கூட கட்டிடங்கள், சமையலறை முக்கியமாக தேவையான எண்ணிக்கையில் தரமான கழிப்பறைகள் கண்டிப்பாக அரசாங்கத்தின் கடமையாக இருக்கவேண்டும்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவன தலைவர்